CC. 513/2025 (PW.1 )
அ.சா. 1 – லிங்கதுரை
த/பெ.
நாள். 23.06.2026

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். பிரிவு குவிமுச 311/ 348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் மறுவிசாரணை.
( எதிரி ஆஜரில்லை ).

எ.த.கு.வி:–

சம்பவம் நடந்த போது நான் தோணுகாலில் இருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அதே போல் எனது உறவினர் இளங்கோவன் மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். எனக்கு எந்த வாகனம் விபத்தை ஏற்படுத்தியது என்று தெரியாது என்றால் சரியல்ல, ஒரு வெள்ளை நிற கார் விபத்தை ஏற்படுத்தியது, 15 வருடங்கள் ஆனதால் எனக்கு வாகனத்தின் பதிவெண் மறந்துவிட்டது. நான் நேரடியாக விபத்தை பார்த்தேனா அல்லது கூட்டம் கூடிய பின்னர் அங்கு சென்று பார்த்தேனா என்றால் நான் சுமார் 20 மீ தொலைவில் சென்று கொண்டிருந்தேன், கூட்டமாக இருந்ததால் வாகனத்தை நிறுத்தி பார்த்தேன். சம்பவ இடத்தில் சுமார் 50 நபர்கள் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ நடந்தவுடன் பேச இயலாமல் மயக்க நிலையில் தான் இருந்தேன் என்றால் சரியல்ல. அதே போல் எனது உறவினர் சாலையை கடந்திருந்தாலும் மேற்படி விபத்து ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். எனது உறவினர் தலை கவசம் அணிந்திருந்தார் என்றால் சரிதான். நான்கு சக்கர வாகனம் என்ன வேகத்தில் வந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் வேகமாக வந்தது. வக்காணங்குண்டு பேருந்து நிறுத்ததில் ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். நான் யூகத்தின் அடிப்படையில் தான் கார் வேகமாக வந்தது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பின்னர் 108 ஆம்புலன்சிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். சம்பவம்

நடந்த பின்னர் எவ்வளவு மணி நேரம் கழித்து போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சுமார் 45 நிமிடங்கள் கழித்து வந்தார்கள். எனது உறவினரான இறந்த நபரை யார் 108 ஆம்புலன்சில் ஏற்றினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலீசாரிடம் தகவலை கூறிய பின்னர் அவர்கள் எழுதிய ஆவணத்தில் போலீசார் என்னிடம் அதை படித்து காண்பித்த பின்னர் நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். இறந்து போன நபர் எனது உறவினர் என்பதால் இழப்பீடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் யூகத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல, நடந்ததை மட்டும் தான் கூறுகிறேன்.

**மறுவிசாரணை**

இல்லை

**CC. 513/2025 (PW.2 )**
**அ.சா. 2 – ஜெயபால்**
**த/பெ.**
**நாள். 23.06.2026**

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். பிரிவு குவிமுச 311/ 348 BNSS –ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு அரசு தரப்பில் மறுவிசாரணை.
( எதிரி ஆஜரில்லை ).

**எ.த.கு.வி:–**

சம்பவம் எவ்வாறு நடந்தது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனக்கும், இளங்கோவனுக்கும் இடையில் வாகனம் சென்றிருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான்கு சக்கர வாகனம் என்ன வேகத்தில் வந்தது என்பது பற்றி குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான். நான் யூகத்தின் அடிப்படையில் தான் நாக்கு சக்கர வாகனம் அதிவேகமாக சென்றது என்று கூறினேன் என்றால் என்னை தாண்டி நான்கு சக்கர வாகனம் சென்றது, அதனால் வேகமாக சென்றது என்று கூறுகிறேன். யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் விபத்தை ஏற்படுத்தியது வெள்ளை நிற மாருதி சிப்ட் கார் ஆகும். சம்பவ இடத்தில் எப்போதும் ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பிறகு சுமார் 50 நபர்கள் கூடினார்கள் என்றால் சரிதான். யார் 108 ஆம்புலன்சிற்கு தகவல் கூறினார்கள் என்றும், யார் இறந்து போன நபரை ஆம்புலன்சில் ஏற்றினார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன எனது உறவினர் ரோட்டில் எந்த வழியே சென்றார் என்று என்னால் துல்லியமாக கூற இயலாது என்றால் சரிதான். எனது அண்ணன் இளங்கோவன் திடீரென்று மேற்கிலிருந்து கிழக்கு பக்கம் சென்றால் கூட விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் அவ்வாறு அவர் சென்றிருக்க

வாய்ப்பில்லை. விபத்து ஏற்படுத்திய கார் எந்த திசையில் நின்றது என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் சம்பவம் பற்றி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் எனது அண்ணன் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல, நடந்த விஷயங்களை தான் கூறுகிறேன். அதி வேகமாக வந்து நான்கு சக்கர வாகனம் எனது அண்ணன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி இருந்தால் எனது அண்ணன் சுமார் 50 மீட்டர் தொலைவில் தூக்கி எறியப்பட்டு இருப்பார் என்றால் சரிதான் அவ்வாறு தான் அக்கம் பக்கத்தினர் கூறினார்கள். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மபந்தமும் இல்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை